Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 09 செவ்வாய்க்கிழமை (26 10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 332

# தொண்டமானின் கருத்துக்கு அமைச்சரவைக்குள் எதிர்ப்பு

## கூட்டுப் பொறுப்பை அவர் மீறுவதாகக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்டோபர் 26

அமைச்சர் எஸ் தொண்டமான் இனப்பிரச்சினை தொடர்பாக அண்மைக் காலத்தில் பகிரங்கமாகத் தெரிவித்து வரும் கருத்துக்கள் அமைச்சரவைக்குள் அவருக்கு எதிரான உணர்வலைகளைத் தோற்றுவித்திருப்பதாகக் கூறப்படுகிறது

அமைச்சரவை கூட்டுப் பொறுப்பை மீறி அரசாங்கத்தை நேரடியாகத் தாக்கும் விதத்தில் அவர் கருத்து வெளியிட்டு வருவதாக சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் அரசுத் தலைமைப்பீடத்திடம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது குறித்து சில அமைச்சர்கள் நாடாளுமன்றத்திலும் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். தமிழர் பிரச்சினையில் சிங்களத் தலைவர்கள் நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்று திரு. தொண்டமான் லண்டனில் செய்தியாளர் மாநாட்டில் கூறியிருப்பது சில அமைச்சர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

காவல் துறையின் சிறப்புப் பணியால்

## குடாநாடு, வன்னிப் பகுதிகளில் குற்ற செயல்கள் குறைகின்றன

### பொறுப்பாளர் நடேசன் தகவல்

✶ சென்ற ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டின் கடந்த 9 மாத காலப் பகுதியில் யாழ். குடாநாடு மற்றும் வன்னிப் பகுதிகளில் பொது மக்களிடையே குற்றச் செயல்கள் மிகவும் குறைந்துள்ளன.

✶ கடந்த ஆண்டின் (1992) முதல் ஒன்பது மாத காலத்தில் யாழ். குடாநாட்டில் பாரிய குற்றங்கள் எனக் கருதப்படும் 4 ஆயிரத்து 167 குற்றச் செயல்கள் பற்றிய முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. இந்த ஆண்டு கடந்த செப்டெம்பர் வரையான 9 மாத காலப்பகுதியில் ஆயிரத்து 230 குற்றச் செயல்கள் குறித்து மட்டுமே முறையிடப்பட்டுள்ளன.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. ப. நடேசன் இத்தகவலை வெளியிட்டார்.

தமிழீழ காவல்துறையினரா



பிக்கப்பட்டு எதிர்வரும் நவம்பர் மாதத்துடன் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன. அதனையொட்டி நேற்று நடைபெற்ற செய்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தலைநகர் கொழும்பில்

## வெள்ளி, சனி, ஞாயிறிலும் பல தமிழ் இளைஞர் கைது

கொழும்பில் தமிழ் இளைஞர்கள் வகைதொகையின்றி கைது செய்யப்படுவது தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களிலும் மிக அதிகமான தமிழ் இளைஞர்கள் கொழும்பு மாநகரில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்படும் இளைஞர்கள் மீண்டும் மீண்டும் கைது செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சில இளைஞர்கள் இவ்வாறு நான்கு, ஐந்து தடவைகள் கைது செய்யப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. (உ-ச)

வெட்டுப் புள்ளி முறையால் பாதிப்பு:

## கிளிநொச்சியில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், ஒக். 26

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி முறையில் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து கிளிநொச்சியில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியும் கண்டனப் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி விவசாய பீட மாணவர்களும் கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களும் இணைந்து இதனை நடத்துகின்றனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலடியில் ஆரம்பமாகும் ஆர்ப்பாட்டப் பேரணி கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் முடிவடையும். அங்கு கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெறும்.

யாழ்ப்பாணத்திலும் இத்தகைய ஆர்ப்பாட்டப்பேரணி நாளை மறுதினம் நடைபெற விருக்கிறது. (உ-த)

## ஆனையிறவு ஷெல்லுக்கு ஆலங்கேணியில் இருவர் பலி!

தென்மராட்சி, ஒக். 26

நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் ஆனையிறவு முகாமிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் ஆலங்கேணிக் கரையில் நின்ற இருவர் உடல் சிதறிப் பலியாகினர்.

ஆலங்கேணிக் கரையில் நிறுத்தப்பட்டிருந்த படகில் இருந்த செல்வநாயகம் ரஞ்சகுமார் (வயது 18) என்ற இளைஞரும் மற்றொரு பயணியுமே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர்.

செல்வநாயகம் ரஞ்சகுமார் பருத்தித்துறை இன்பருட்டியைச் சேர்ந்தவர். பூநகரிப் படகுச் சேவையில் ஈடுபடும் படகு ஒன்றில் உதவியாளராகக் கடமையாற்றியவர்.

ஷெல்லினால் சிதறுண்ட இவரின் உடல் நேற்று பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்டது. (உ-109-117)

## தெரிவுக்குழு அறிக்கை 9 ஆம் திகதி சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக் 26

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது அறிக்கையை அடுத்த மாதம் 9 ஆம் திகதி நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க இருக்கிறது.

அமைச்சர் டாக்டர் விமல் விக்கிரமசிங்கா கடந்த வாரம் நடந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் பேசியபோது இத்தகவலை வெளியிட்டார். (உ-ச)

## அதிசக்தி வாய்ந்த டாங்கிகள் வாங்க அரச தரப்பு முயற்சி!

கொழும்பு, ஒக். 26

ஸ்ரீலங்கா ராணுவத்திற்கு அதிசக்தி வாய்ந்த ராணுவ டாங்கிகளை கொள்வனவு செய்வதில் ஸ்ரீலங்கா பாதுகாப்புத் துறை ஈடுபட்டுள்ளது

வலிமை வாய்ந்தவை எனக் கருதப்பட்ட செக்கோஸ்லோவேக்கிய டி 55 டாங்கிகள் 'யாழ்தேவி' ராணுவ நடவடிக்கையின் போது புலிகளின் தாக்குதல்களில் தகர்க்கப்பட்டன. இதனை அடுத்து இந்த வகை டாங்கிகள் அவ்வளவு சக்தி வாய்ந்தவை அல்ல என்று ராணுவம் கருதுகின்றது.

இதனால் டி 55 ரக டாங்கிகளிலும் பார்க்க கூடிய சக்தியுள்ள டாங்கிகளை கொள்வனவு செய்வது குறித்து இராணுவ வட்டாரங்கள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றன.

அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா போன்ற நாடுகள் தற்போது பயன்படுத்தும் அதிக வலுவுள்ளதும், கனரகமானதுமான யுத்த டாங்கிகளை கொள்வனவு செய்வது குறித்து பாதுகாப்பு அமைச்சு மட்டத்தில் தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றது

இதேவேளை —

ஸ்ரீலங்கா அரசு கொள்வனவு செய்துள்ள டி-55 ரக டாங்கிகளில் பல பழுதடைந்துள்ளதாக இராணுவ வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது. இவற்றை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 5,000 பரல் மண்ணெண்ணெய் அடுத்த வாரம் வந்து சேரும்

யாழ். மாவட்டத்தில் உள்ள குடும்பங்களுக்கு விநியோகிக்க ஐயாயிரம் பரல் மண்ணெண்ணெய் அடுத்த வாரம் இங்கு வந்து சேரும் என யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு செ. பத்மநாதன் தெரிவித்தார்.

சுமார் 8 ஆயிரம் பரல் மண்ணெண்ணெயை ஏற்றிக்கொண்டு "ருஹுணு" கப்பல நாளை கொழும்பில் இருந்து புறப்படும் என்றும் —

எதிர்வரும் சனிக்கிழமை அது பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் —

எஞ்சிய அடுத்த தொகுதி மண்ணெண்ணெய் பரல்களை ஏற்றிக்கொண்டு "கோமாரி" கப்பல் அடுத்த வாரம் இங்கு வந்து சேரும் என்றும் கொழும்பில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-5)

## கிளாலியில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக் 26

நேற்று இரவு 8 மணியளவில் கிளாலிப் பகுதியில் ... வேட்டுக்களைத் தீர்த்தது.

## அரங்கப் போட்டிகள்:

## தலைவரின் ஒப்பமிடப்பட்ட சான்றிதழ்கள் பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஒக் 26

கரும்புலிகள் நாளை ஒட்டி விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட அரங்கப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா நேற்று மாலை 4.30 மணியளவில் நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெற்றது.

அரங்கப் போட்டிகளில் வெற்றி பெற்ற கலைஞர்களுக்கு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனால் ஒப்பமிடப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இச் சான்றிதழ்களை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் கலைஞர்களுக்கு வழங்கினார்.

கலை பண்பாட்டுக் கழக யாழ் மாவட்டப் பொறுப்பாளர் திரு. அன்பரசன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவை யாழ். மாவட்டத் தளபதி திரு. அன்பு, மகளிர் படையணித் தளபதி செல்வி விதுஷா ஆகியோர் ஈகைச்

(3 ஆம் பக்கம் பார்க்க)

தங்கையே!
நீ .... பெரும் தீ
உலகப் பெண்களுக்கு உதாரணம்
தமிழீழம் உன்னால் தலைநிமிர்கிறது
களத்துக்கு வா கைவிலங்கை உடைக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இந்தியாருடே, ஆண்டு மலர் 93-94 (முத்தமிழ் இலக்கிய விருந்து), உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள். தீபாவளிக் கார்ட் வகைகள் மொத்தமாகக் கிடைக்கும். மக்மிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(இ-6430)

### வகுப்புகள்

ஓவிய சிற்ப நுண்கலை வகுப்புகள் ஆரம்பமாகின்றன. மாணவருக்கும் ஏனையோருக்கும் வெவ்வேறு பிரிவுகள். இல. 6, சென்ற் கொஸ்தே வீதி, கச்சேரியடி, சுண்டிக்குளி. (27747)

### புலமைப் பரிசில் பயிற்சி

வெளிவந்து விட்டது. ஆவலோடு எதிர்பார்த்த புலமைப் பரிசில் நவீன பயிற்சி நூல் 20 நவீன கட்டுரைகளையும் கணித தமிழ்ப் புதிர்களையும் 10 மாதிரி வினாத்தாள்களையும் விடைகளுடன் கொண்டது. கிடைக்குமிடம்: புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27762)

## தேர்வாளர் கூட்டம்

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வின் விஞ்ஞான செயன்முறைத் தேர்வின் தேர்வாளர்களுக்கான கருத்தரங்குகள் அடுத்த மாத முதல் வாரத்தில் நடைபெறும்.

★ யாழ்ப்பாணம், வேலணைக் கோட்டங்களுக்கான கருத்தரங்கு 3ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும்—

★ வடமராட்சிக் கோட்டத்துக்கான கருத்தரங்கு எதிர்வரும் 4ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரியிலும்—

★ தென்மராட்சிக் கோட்டத்துக்கான கருத்தரங்கு எதிர்வரும் 4ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறும்.

## தொண்டர் ஆசிரியர் பொதுக் கூட்டம்

மேற்படி பொதுக் கூட்டம் எதிர்வரும் 30-10-93 (சனிக்கிழமை) காலை 11.00 மணிக்கு யாழ். மட்டப்படிப்புக் கல்லூரியில் நடைபெறும். இதில் நியமனம் கிடைத்த பயிலுநர் ஆசிரியர்களையும், தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கிறேன்.

செ. பரமேஸ்வரன்
தலைவர்
(27782)

---

சந்நிதானம்

## செல்வநாகபூஷணி அம்பாள் ஆலயம்

கௌரி விரதத்தை முன்னிட்டு இவ்வாலயத்தில் 24-10-93 தொடக்கம் 21 நாட்கள் ஒவ்வொரு நாளும் காலை 6.00 மணிக்கு விஷேச பூசை நடைபெற்று சகஸ்ரநாம அர்ச்சனை நடைபெற்று வருகின்றது.

இதில் ஒரு நாள் சகஸ்ரநாம அர்ச்சனையை செய்ய விரும்பும் அடியார்கள் அதில் பங்குபற்றி அம்பாளின் அருளைப்பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படிக்கு
செ. குகநாதன்
ஆலய பரிபாலினர்
(6559)

---

## தொழிநுட்பக் கல்லூரி
### யாழ்ப்பாணம்
## 1994ஆம் கல்வியாண்டிற்கான அனுமதி

1993-10-01ஆம் திகதி அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதற்கிணங்க உரியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை 1993 நவம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் அதிபர், தொழிநுட்பக் கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்பி வைக்குமாறும், எதுவித காரணம் கொண்டும் நேரடியாகப் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் அறியத் தருகிறேன்.

க. ஜெயரத்தினம்
அதிபர்

தொழிநுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
1993 — 10 — 25. (சி/6272)

---

## கலை, வர்த்தகக் கல்லூரி
### C. C. A.

வெலிங்டன் சந்திக்கருகில்,
யாழ்ப்பாணம்.

## A/L 94 DAY CLASSES
### ஆரம்பம்: 28 - 10 - 1993
பிரிவு - III

எமது ஆசிரியர் குழு:

பொருளியல் — திரு. உதயன்
கணக்கியல் — திரு. ஸ்ரீ
வர்த்தகம் — திரு இரட்ணம்
அளவையியல் — திரு. சயந்தன்

நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:
பிரிவு-I, II க்கு பின்வரும் நேர அட்டவணைப்படி வகுப்புகள் நடைபெறுகின்றன திங்கள், வெள்ளி பாடத்திட்டமும் செவ்வாய், வியாழன் வினா-விடை (Paper Class) வகுப்பும் நடைபெறுகிறது.

நேர அட்டவணை

| பாடம் | திங். | செவ். | வியா. | வெள். |
|---|---|---|---|---|
| பொருளியல் | | | | |
| பிரிவு— I | 12— 2 | 8—10 | 8—10 | 12— 2 |
| — II | 10—12 | 10—12 | 10—12 | 10—12 |
| கணக்கியல் | | | | |
| பிரிவு — I | 10—12 | 10—12 | 10—12 | 10—12 |
| — II | 12— 2 | 8—10 | 8—10 | 12— 2 |
| வர்த்தகம் | 3— 5 | — | — | 3—5 |
| அளவையியல் | 5— 6 | — | — | 5—6 |

— நிர்வாகி.
[சி-6438]

---

## செயன் முறை பரீட்சை

அண்மையில் நடைபெற்ற தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வின் விஞ்ஞான செயன்முறைத் தேர்வு அடுத்த மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் முன்னர் அறிவிக்கப்பட்ட பரீட்சை நிலையங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

---

உ
சரசாலை இலந்தைத்திடல்

## ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயம்
## விசேட மங்கள தீபபூஜை

நவராத்திரியை அடுத்து வரும் பௌர்ணமி தினமான 30 - 10 - 1993 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பல மாதரசிகள் கலந்து கொள்ளும் விசேட மங்கள தீப பூஜை நடைபெறும்.

தீப பூஜையில் கலந்து கொள்ள விரும்புவோர் முன்கூட்டியே ஆலயத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

கு. நகுலேஸ்வரன்
(ஆலய பரிபாலகர்)

சரசாலை. (27779)

---

## 45 ஆம் நாள் நினைவலைகள்
26 — 10 — 93

மலர்வு: 16 — 02 — 1968



உதிர்வு: 12 — 09 — 1993

### அமரர் தம்பிஐயா மயூரநாதன்
(அப்பன்)

(புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம்)

மலர்ந்து மணம் வீசி மனங்களை மகிழ்விக்கு முன் இறைவன் அடி
சேர்ந்து சென்ற காரணம் தான் யாமறியோம் மயூரா!
அரும்புகளும் அவனுக்கு அர்ச்சிக்கப்படுவதனால
விரும்பியுன்னை வரவழைத்தது விதியன்றி வேறென்ன?

உன்னை இழந்து தவிக்கும்
அப்பா, அம்மா, சகோதரங்கள்;
உறவினர்கள்.

958/24, தலையாழி ஒழுங்கை,
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (27784)

---

## 31ஆம் நாள் நினைவலைகள்

தாய் மடியில்: 11 — 01 — 1988



ஆண்டவன் அடியில்: 27 — 09 — 1993

### செல்வன் ஜனகன் ஸ்ரீசந்திரன்
(ஜனாக்குட்டி)

கொஞ்சும் மொழி பேசிடும்
பிஞ்சு வயதில் நெஞ்சம்
வெடிக்க எம்மை விட்டு
பிரிந்தாயே ஜனா!

எம்மை விட்டுப் பிரிந்து 31 நாட்கள் மறைந்தாலும் உமது பசுமையான நினைவுகள் எம்மை விட்டு அகலவில்லை.

நாளை 27-10-1993 புதன்கிழமை எம் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் எம் அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்,
அன்பு அப்பா, அம்மா,
அன்பு உறவினர்கள்,
அன்பு மாமாக்கள்.

நாவலடி,
வளிக்காடு. (27778)

---

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர் !

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் ஐப்பசித் திங்கள் 12 ஆம் நாள் (28-10-1993) வியாழக்கிழமை காலை 9.35 மணிமுதல் 11.35 மணிவரை வரும் பூர்வபட்ச திரயோதசி திதியும், உத்தரட்டாதி நட்சத்திரமும், தனு லக்கினமும், சித்தயோகமும் கூடிய சுபவேளையில்

| எமது கனிஷ்ட புத்திரன் | எமது சிரேஷ்ட புத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| நவநேசன் | நளினி |
| (ஈசன்) | |
| (அஞ்சல் திணைக்களம், யாழ்ப்பாணம்.) | (ஆசிரியை, பளானி வித்தியாசாலை, அரியாலை.) |

ஆகியோருக்கு திருமணம் செய்ய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகை திருவருள் பாலித்துள்ளதால் மேற்படி, வைபவம் நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அவ்வமயம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதிப்பதோடு அதைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை அன்புடன் எதிர்பார்க்கும்

திருமதி விசாலாட்சி சுந்தரமூர்த்தி,
இல. 117, ஜீ. பி. எஸ். வீதி,
கல்வியங்காடு.
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி த. கந்தசாமி,
இல. 50/26 ஆனைப்பந்தி வீதி,
அரியாலை,
[illegible]

(இரு வீட்டார் அழைப்பு) [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா - தமிழக ஆளுநர் கருத்து வேறுபாடு முற்றியது!

## தனித்தனி பந்தல் அமைத்து ராவை வரவேற்றனர்.

சென்னை, ஒக். 26

சென்னைக்கு நேற்று ஒன்றரை மணித்தியாலப் பயணம் ஒன்றை மேற்கொண்டு வந்த பிரதமர் நரசிம்மராவை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வைத்து தனித்தனி பந்தல்கள் அமைத்து முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.கவினரும் —

ஆளுநர் சென்னாரெட்டி தலைமையில் இந்திரா காங்கிரஸினரும் மாலைகள் அணிவித்து வரவேற்றனர்.

ஆளுநர் சென்னாரெட்டிக்கும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் இடையே ஏற்பட்டு உள்ள கருத்து மோதல் பெரும் பிளவாக மாறிவிட்டது என்பதை இச் சம்பவம் புலப்படுத்தியதாக பி.பி.ஸி குறிப்பிட்டது.

ஆளுநரும் முதலமைச்சரும் மரியாதைக்குக் கூட ஒருவருக்கு ஒருவர் முகமன் கூறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

உபஜனாதிபதி நாராயணனைப் பார்க்க ஆளுநரோடு, பிரதமர் மருத்துவ மனை சென்றார்.

சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வரும் உப ஜனாதிபதி கே. ஆர். நாராயணனை பார்க்கவே பிரதமர் ராவ் தமிழகத்துக்கு வந்து சென்றார். (உ-எ)

## ஜெயலலிதாவுடன் பேச்சை ராவ் நறுக்கென முடித்தார்

சென்னை, அக். 26

சென்னை விமான நிலையத்தில் நேற்று பிரதமர் நரசிம்மராவும் முதலமைச்சர் ஜெயலலிதாவும் தனித்து 20 நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இப்பேச்சுவார்த்தையில் "அரசியலைத் தவிர்த்து அலுவலக வேலையோடு பிரதமர் தமது அலுவலை நறுக்காக முடித்துக் கொண்டார்" — என்று பி. பி. ஸி தெரிவித்தது.

ஜெயலலிதாவைச் சந்திப்பதற்கு முன்னர் பிரதமரை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி சந்தித்தார்.

ஜெயலலிதா தலைவராக இருக்கும் வரை அ. தி. மு. க வுடன் உறவு வைப்பதை மாநில காங்கிரஸ் விரும்பவில்லை என்று அவர் அப்போது பிரதமருக்குத் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸுடன் மீண்டும் கூட்டு வைக்க ஜெயலலிதா சம்மதம் தெரிவித்துள்ளார் என்றும்—

அதற்கு அவர் இரண்டு நிபந்தனைகளை விதித்துள்ளார் என்றும் தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் நேற்று செய்திகள் வெளியிட்டன.

முதலாவது நிபந்தனை— வாழப்பாடி ராமமூர்த்தி மாநில காங்கிரஸ் தலைவராக இருக்கக்கூடாது.

இரண்டாவது நிபந்தனை— ஆளுநர் பதவியில் இருந்து டாக்டர் சென்னாரெட்டி அகற்றப்பட வேண்டும்.

இந்த இரண்டு நிபந்தனைகளுக்கும் காங்கிரஸ் கூறியிருக்கும் முடிவு, "முடியாது; முடியாது; இரண்டு ஆண்டு கூட்டு அனுபவம் போதும்" — என்பதே.

— இவ்வாறு பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவித்தார். (உ-எ)

## உதயன்

### தெற்கில் நடக்கும் தமிழர் கொலைகள்

தெற்கில் தமிழர்கள் காரணமின்றியும் கண்டபடியும் கைது செய்யப்படும் நிலை மேலும் மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. தமிழ் இளைஞர்கள் இனந்தெரியாத குழுக்களினால் இரவு வேளைகளில் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்படுகிறார்கள்.

இலக்கத் தகடு இல்லாத வாகனங்களில், சிவில் உடையில் இந்தக் குழுவினர் வருகின்றனர். தமிழ் இளைஞர்களை மிரட்டி, விசாரணைக்கெனக் கூட்டிச் சென்று கொலை செய்துவிட்டு சடலங்களை தூர இடங்களில் கொண்டு போய்ப் போடுகின்றனர்.

இந்தக் கொடூரச் சம்பவங்கள் 1988, 89ஆம் ஆண்டுகளில் தென்னிலங்கையில் நடைபெற்ற நிகழ்வுகளை ஒத்திருக்கின்றன. ஜே. வி. பி. யினரை ஒடுக்குவது என்ற போர்வையில் இலக்கத் தகடுகள் இல்லாத வாகனங்களில் இரவு வேளைகளில் சென்ற கொலைக் குழுக்கள் ஜே. வி. பி. ஆதரவாளர் எனக் கூறப்பட்டவர்களையும், அவர்களின் குடும்பத்தினர்களையும், உறவினர்களையும் மற்றும் ஆளுங் கட்சிக்கு எதிரானவர்களையும் பிடித்துச் சென்று கொலை செய்தன.

இவ்வாறாக கொலைக் குழுக்கள் சுமார் 60,000 சிங்கள இளைஞர் யுவதிகளையும், பொதுமக்களையும் கொன்று குவித்ததாகப் புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வந்தது. "பச்சைப் புலிகள்" என்றும் "கறுப்புப் பூனைகள்" என்றும் வர்ணிக்கப்பட்ட இந்தக் கொலைக் குழுக்களில் படைகளைச் சேர்ந்தவர்களே அங்கம் வகித்தார்கள் எனப் பின்னர் தகவல்கள் வெளியாகின.

இந்தப் படுகொலைகளைச் செய்ததில் பெரும்பங்கு வகித்ததாகக் கூறப்பட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல திடீரென அரசாங்கத்துக்கு எதிரான அறிக்கைகளை—அதாவது படுகொலைகளில் அரச உயர்பீடத்துக்குப் பங்குண்டென்ற அறிக்கைகளை விடுத்தார். அதனை ஆட்சேபித்து அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டதும் அவர் தலைமறைவானார்.

ஆனால் பிரேமதாசா இறந்து விஜேதுங்கா பதவிக்கு வந்ததும், அவர் மீதான வழக்கு வாபஸ் பெறப்பட்டதோடு கப்பல் கூட்டுத்தாபனத்தில் உயர் பதவியும் வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு வகையில் பார்க்கப் போனால் அரசாங்கமே படுகொலைகளுக்குப் பின்னால் நின்றது என்பதை விஜேதுங்கா அரசு ஒப்புக்கொண்டதற்குச் சமனாகிவிட்டது.

இப்போது தெற்கில் தொடங்கியிருக்கும் தமிழர் படுகொலைகளுக்குப் பின்னாலும் அரசாங்கமே இயங்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. படுகொலைகளில் ஈடுபடுபவை முன்னரைப் போல, ஆயுதப் படைகளைச் சேர்ந்த கொலைக் குழுக்களாகவும் இருக்கலாம். கூலிப்படைக் கொலைக் குழுக்களாகவும் இருக்கலாம்.

விடுதலைப் புலிகள் தலைநகருக்குள் ஊடுருவியுள்ளதாக செய்திகளைப் பரப்பி, தமிழர்களைக் கைது செய்து வந்த அரசு திடீரென இந்தக் கொலை வெறியாட்டத்தில் இறங்கியிருக்கிறது. இது நிச்சயமாக தமிழர் இன ஒழிப்பின் உச்சக்கட்டமே.

வடக்கு - கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழரைக் கொன்று வரும் அரசு, அதற்கு மேலதிகமாக கொழும்பில் - தெற்கில் தங்கும் தமிழர்களையும் கொல்ல ஆரம்பித்திருக்கிறது. குறிப்பாகத் தமிழ் இளைஞர்களைக் கொன்றால் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடலாம் என்று நினைக்கிறது.

இதனைத் தமிழர்களாலேயே தடுக்க முடியும். வடக்கு - கிழக்கில் இருந்து சென்ற தமிழ் இளைஞர்கள் உடனே தமது தாயகத்துக்குத் திரும்பி வருவதே அதற்கான ஒரே வழி. பிறந்த மண்ணே தங்களுக்கு என்றும் பாதுகாப்பானது என்பதனை அவர்கள் இனியாவது உணர வேண்டும். அரசு மீது விரல் சுட்டுவதாலோ, அது தங்களைப் பாதுகாக்கும் என்றோ எண்ணுவதோ சுத்த அறியாமையாகும். அங்கு கொலைக் குழுக்களின் கையால் சித்திரவதையுண்டு சாவதை விட, மண்ணைக் காக்கும் போராட்டத்தில் இணைவது மேலல்லவா?

## இன்று

யாழ்ப்பாணக் கல்லூரியின் 1993ஆம் ஆண்டு ஆங்கில தின விழா இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஒட்லி மண்டபத்தில் நடைபெறும். (க-161)

o o o

பலாலி ஆசிரிய கலாசாலையில் இருந்து 1992 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய வர்களின் பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இதில் நான் சித்தி பெற்றவர்கள் மீண்டும் விண்ணப்பிப்பதற்காக இன்று செவ்வாய் பலாலி ஆசிரிய கலாசாலைக்கு சமுகமளிக்கும் படியும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. (த)

### பாடசாலைகளில்

யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் கலைவிழா ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்கு அதிபர் திரு. மு. செல்லையா தலைமையில் நடைபெறும். (த)

o o o

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் வாழ்க்கைத் திறன் ஆரம்பப் பிரிவுகளுக்கான பொருட்காட்சி நாளை புதன் காலை 9 மணி முதல் 1 மணி வரை வண்ணார் பண்ணை மேற்கில் உள்ள வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். (த)

### நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 26

தமிழ்த் தாய் வெளியீட்டு நிறுவனத்தின் வெளியீடான ராக. பத்மநாதனின் "அதிர்ச்சி நோய் எமக்கல்ல" என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும்.

தமிழ்க் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் நூலை வெளியிட்டு வைப்பார். இசித்திரன் ஆசிரியர் திரு. சிவஞான சுந்தரம் முதற் பிரதியைப் பெறுவார்.

வெளியீட்டுரையை அ. யேசுராசாவும், 'மதிப்பீட்டுரையை பேராசிரியர் அ. சண்முகதாஸ்' கவிஞர் சோ. பத்மநாதன், பண்டிதர் வீ. பரந்தாமன் ஆகியோரும் நிகழ்த்துவர். (த)

### அதிபர்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 26

இவ் வருடம் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஆண்டு - 9 கனிஷ்ட தொழில் நுட்பச் சான்றிதழ் பரீட்சைக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை கோட்டக் கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப விண்ணப்பப்படிவங்களை கோட்டக் கல்வி அலுவலகங்கள் இம் மாதம் 29 ஆம் திகதி யாழ். கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்க ஏதுவாக அதிபர்கள் அவற்றை உடனடியாகச் சமர்ப்பிக்க வேண்டும் என்று யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார். (த)

### மரநடுகை வாரம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக் 26

யாழ்ப்பாண மாவட்டத்தில் மரம் நடுகை வாரம் இன்று ஆரம்பமாகிறது. நவம்பர் முதலாம் திகதி வரை அது நீடிக்கும்.

மர நடுகை சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன ஆதரவில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தில் உள்ள அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளரும், கோட்ட அரசியல் துறை பொறுப்பாளர்களும் பங்கு கொண்டனர்.

காடு வளர்ப்புக்காக ஒருங்கிணைந்து செயற்படுவதெனவும் சூழல் பாதுகாப்புச்சபை ஒன்றை நிறுவுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் மர நடுகைகளை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினூடாக மேற்கொள்வதெனவும் கலந்துரையாடலில் மேலும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

## உடற்கல்வி, தமிழுக்கு விசேட ஆசிரியர் பயிற்சி

### விண்ணப்பம் அனுப்பலாம்

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கான இரு விசேட பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் தமிழ் விசேட பயிற்சி நெறியும், பலாலி ஆசிரிய கலாசாலையில் உடற்கல்வி விசேட பயிற்சி நெறியும் ஆரம்பிக்க கல்வி அமைச்சு அனுமதி வழங்கி உள்ளது.

அடுத்த வருடம் ஆரம்பிக்க உள்ள இந்த விசேட பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதி நாள் இம் மாதம் எட்டாம் திகதியாகும். வர்த்தமானி உரிய நேரத்தில் கிடைக்காதவர்கள் விண்ணப்பங்களை உடனடியாக அனுப்பவேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் கருத்துத் தெரிவித்தார். விண்ணப்பப் படிவங்கள் குறித்து சங்கப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

விண்ணப்பங்களின் பிரதிகளை சம்பந்தப்பட்ட ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## திருமலைக்கு 'வாதுவ' செல்வதில் தாமதம்

யாழ்ப்பாணம், ஒக் 25

தற்சமயம் பருத்தித்துறையில் பொருட்களை இறக்குவதில் உள்ள தடங்கல் காரணமாக 'வாதுவ' கப்பல் திருகோணமலை செல்வதும் தாமதமாகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மழை, கடற் கொந்தளிப்பு காரணமாக கப்பலில் இருந்து பொருட்கள் இறக்கும் வேலைகள் மந்த கதியில் நடப்பதாகவும்—

பெரும்பாலும் அடுத்தவார ஆரம்பத்திலேயே இக் கப்பல் திருகோணமலைக்கு பயணிகளை ஏற்றிச் செல்லும் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையில் பயணிகளை இறக்கிவிட்டு அங்கு 4 ஆயிரம் மெற்றிக் தொன் மாவை ஏற்றிக் கொண்டு மீண்டும் 'வாதுவ' பருத்தித் துறைக்கு வரும். (உ-8)

## வதிவிட வேளாண்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 26

கடந்த வருடம் போன்று இவ்வருடமும் வதிவிட வேளாண்மைப் போட்டியை யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் சிறப்பாக நடத்துவது மற்றும் உற்பத்தியை அதிகரிப்பது ஆகியவை தொடர்பாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஏற்பாடு செய்த கலந்துரையாடல் ஒன்று கடந்த சனிக்கிழமை மேற்படி நிறுவனத்தின் கோண்டாவில் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் பிரதி மாவட்ட ஆணையாளர், உதவித் திட்டப் பணிப்பாளர், உதவி அரசாங்க அதிபர்கள், ... பாளர், காங்கேசன்துறை உதவிப் பணிப்பாளர், மருதசேனை திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், கால்நடை வைத்தியர்கள், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில் இப்போட்டிக்கான நிபந்தனைகள், விதிகள், காலவரையறை போன்ற விடயங்கள் ஆராயப்பட்டதுடன் போட்டியின் செயற்பாடுகள் யாவும் யாழ். மாவட்ட கிராமிய உற்பத்திக்குழு மூலம் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. (த)

### ரயில்வே ஓய்வூதியம்

நல்லூர், ஒக் 26

யாழ். மாவட்டத்தில் உள்ள ரயில்வே திணைக்கள ஊழியர்களின் ஒக்டோபர் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் யாழ். செயலகத்தினால் அந்த அந்த வங்கிகளுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (த-100)

### நீதித்துறை சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 26

சமாதான நீதிவான்கள், மொழிபெயர்ப்புத் தொழில் புரிபவர்கள் மற்றும் நில அளவையாளர்கள் ஆகியோருக்கான முக்கிய சந்திப்பு ஒன்று நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நீதி நிர்வாகத் துறையின் நடுவப் பணியகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (த)

### பாதிக்கப்பட்ட மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 26

பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்ப இருக்கும் மகஜரில் இதுவரை கையொப்பம் இடாத மாணவர்களை—

இன்று பி. ப 3.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதே வேளை புதிய வெட்டுப் புள்ளிகளால் வடபகுதி மாணவருக்கு ஏற்பட்ட பாதிப்புக் குறித்து பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியத்தினர் பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் தோறும் சென்று மாணவர்களுக்கு விளக்கமளித்து வருகின்றனர்.

காலெண்டி கல் நோபக் நிறுவனத்தில் இன்று காலை 9 மணிக்கு பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியத்தினர் தமது விளக்கக் கூட்டத்தை நடத்துவர். (அ)

### தமிழ்ப் பாட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 26

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெற உள்ள ஜி. சீ. ஈ. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி தமிழ்ப் பாடத்திற்கான கல்விக் கருத்தரங்குகள் நடைபெற உள்ளன.

"மாற்றம்" சஞ்சிகையினரால் நடத்தப்பட இருக்கும் இக் கல்விக் கருத்தரங்குத் தொடரின் முதலாவது நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

நல்லூர், நாயன்மார்கட்டு, திருநெல்வேலி, கொக்குவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளலாம்.

இக்கருத்தரங்கில் கல்விமான்களும், பிரபல ஆசிரியர்களும் விரிவுரை ஆற்றுவர். (அ)

### தலைவரின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுடர் ஏற்றி ஆரம்பித்து வைத்தனர்.

கலைப் பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, வடமராட்சி கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. பாஸ்கரன், செல்வி சந்திரா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

விழாவில் கும்மி, கோலாட்டம், கரகாட்டம், காவடி, மரபு வழி நாடகம், இலகுவழி நாடகம், குறியீட்டு நாடகம் ஆகியவற்றுக்கும், சிறந்த நடிகர், நடிகையர், சிறந்த நெறியாள்கை, சிறந்த இசைக் கலைஞர் ஆகியோருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

பசுந்தாள் உரமே பக்குவமான உரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கௌரி காப்பு

## திருகோணமலை
## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான கேதாரகௌரி விரத காப்பு இம்முறையும் வழமைபோல் யாழ். கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் தேவஸ்தானத்தில் வழங்கப்படும். இக்காப்பு யாழ். மாவட்டத்தில் வேறு எந்த இடங்களிலும் வழங்கப்படமாட்டாது என்பதை அடியார்களுக்கு அறியத் தருகிறோம்.

இங்ஙனம்

சோ. இரவிச்சந்திரக் குருக்கள்
(ஆதீனகர்த்தா, பிரதமகுரு)
பத்திரகாளி கோவில்,
திருகோணமலை.

பொ. கிருஷ்ணமூர்த்தி சர்மா
(ஆலய நிர்வாகம்)
இலங்கை நாயகி அம்மன் கோவில்,
கல்வியங்காடு, நல்லூர்.

(கி.6275)

# மரண அறிவித்தல்கள்

## தம்பிப்பிள்ளை கிட்டிணர்

மல்லாகம் காளி கோவிலடியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை - கிட்டிணர் (பாலகிருஷ்ணன் / கிளைத்தம்பி) அவர்கள் 25 - 10 - 93 இல் காலமானார்.

அன்னார் புவனரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், ஸ்ரீஸ்கந்தராசா, ரஞ்சினி, சுபாஜினி, சிவாஜினி, சுதாஜினி (மல்லாகம் ம. வி. மாணவிகள்), கோகிலராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சரஸ்வதி வல்லிபுரம், திருமதி இலட்சுமிப்பிள்ளை சுப்பிரமணியம், சந்திரமலை, திருமதி வள்ளிப்பிள்ளை நடராசா, விக்கினேஸ்வரன் (பிள்ளையார்), திருமதி தங்கம்மா உருத்திரன் (நைஜீரியா), நடராஜா (ஆசிரியர், அருணோதயக் கல்லூரி அளவெட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று 26 - 10 - 93 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு மல்லாகத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவு செய்து இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நடராஜா
(சகோதரன்)

மல்லாகம்.

ஸ்ரீஸ்கந்தராஜா
(மகன்)

(கி 6274)

## பொன்னையா சொக்கலிங்கம்

சாவகச்சேரி 1 ஆம் ஒழுங்கை கற்குளி பொன்னையா சொக்கலிங்கம் 25 - 10 - 93 இல் காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும், ஞானசுந்தரத்தின் சகோதரரும், அன்னலட்சுமி, சுந்தரலிங்கம், விவேகானந்தன், முருகமூர்த்தி (சுவிஸ்), ரேவதி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், நயோகராஜா, கி. கணேசரத்தினம், ச. செல்வரத்தினம், நாகரஞ்சனி, தேவி ஆகியோரின் மாமனாரும், சுதர்சினி, செந்தில்குமார், கிள்ளைகுமார், சுகந்தி, மதிவண்ணன், கருணா, சுசிதா, மதனராஜ், சஜேந்தினி, குகனேஸ்வரன், ரஜீவன், வினோதினி, சுதன் ஆகியோரின் அன்புப் பேரனும், சாமினி, பிரதீபன், கிரேசபினாவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (26 - 10 - 93) செவ்வாய் காலை 10.00 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
யோகராசா அன்னலட்சுமி
(மகள்)

(6557)

## தம்பையா நாகலிங்கம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், நல்லூர் செட்டித்தெரு 82/8 இலக்க இல்லத்தில் வசித்தவருமாகிய தம்பையா நாகலிங்கம் (23 - 10 - 93, சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

இவர் அழகுமணியின் அன்புக் கணவரும், சர்வானந்தத்தின் அன்புத் தந்தையும், சகாலட்சுமியின் அன்பு மாமனாரும், பிரசாந்தின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற த. ஐயாத்துரையின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 25-10-93. அவரது இல்லத்தில் நடைபெற்றதென்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
நா. சர்வானந்தம்
(மகன்)

82/8, செட்டித்தெரு,
நல்லூர்.

(27788)

## திருமதி பாக்கியம் ஆறுமுகம்

காரைநகர் ஆலிவி வேணியடியைச் சேர்ந்த திருமதி பாக்கியம் ஆறுமுகம் நேற்று (25-10-93) காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் (சின்னையா - ஓய்வு பெற்ற விவசாய வெருப்பாக உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், சுந்தரேஸ்வரனின் அன்புத் தாயாரும், இராசலட்சுமியின் மாமியாரும், இவகுரியர், சூர்யகலா ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணியளவில் வட்டுக்கோட்டையில் நடைபெற்று, பூதவுடல் தனக்கிரிவைக்கார வட்டுக்கோட்டை வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. சுந்தரேஸ்வரன்
(மகன்)

துணைவி (முருகன்கோவிலடி),
வட்டுக்கோட்டை.

(27790)

## ஆலயங்களில்

அளவெட்டி தெற்கு ஸ்ரீநாகவரத நாராயணர் (நாகேஸ்வரம்) கோயிலில் இன்று செவ்வாய்க்கிழமை ஏகாதசி விரதத்தை முன்னிட்டு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

## குடாநாடு, ....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் சந்திப்பின்போது குற்றச் செயல்கள் தொடர்பான புள்ளிவிவர அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டார். அதில் அவர் தெரிவித்ததாவது:-

தமிழீழ காவல்துறை ஆரம்பிக்கப்பட்டு கடந்த இரண்டு வருட காலத்தில் யாழ். குடாநாடு மற்றும் வன்னிப் பிரதேசங்களில் காவல்துறை தனது பணியை மேற்கொண்டு வருகிறது.

போர்க் கால சூழ்நிலையில் — லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில் — தொழிலின்மை போன்ற நெருக்கடிகளுக்கு மத்தியில் — சமூக குற்றங்களைக் களைந்து சமாதானமும், சமூக நீதியும் கொண்ட ஓர் உன்னத சமுதாயத்தை கட்டியெழுப்பும் பணியில் காவல்துறை செயற்பட்டு வருகிறது. போர்க் கால சூழ்நிலையில் பணிபுரியும் போது நாம் பலவிதமான சோதனைகளுக்கு முகம் கொடுக்கிறோம். இவ்வாறு நாம் செயற்பட்டு மக்களுக்கு சவாலாக இருந்த பல சமூக குற்றங்களை பெரிய அளவில் வெற்றிகரமாகக் குறைத்துள்ளோம்.

கடந்த வருடத்தை விட இவ்வருடம்முதல் 9 மாதத்தில் மட்டும் 2 ஆயிரத்து 937 பாரிய குற்றச் செயல்கள் குறைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாகக் குடாநாட்டில் கடந்த வருடம் முதல் 9 மாத காலத்தில் பெண்களுக்கு எதிரான ஆயிரத்து 84 குற்றச் செயல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் இந்த ஆண்டின் கடந்த செப்டெம்பர் வரையான 9 மாத காலத்தில் பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் 130 மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. இது எமது செயற்பாட்டிற்குக் கிடைத்த முழுவெற்றியாகும் — என்றார்.

## தொண்டமானின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவர் அரசை விமர்சிக்கும் விதத்திலும், அரசை எதிர்த்துப் போரிட்டு வரும் விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் வகையிலும் அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பை மீறி பகிரங்கமாக கருத்து வெளியிடுவதை அரசுத் தலைவர்கள் இனியும் அனுமதிக்கக் கூடாது என மூத்த அமைச்சர்கள் சிலர் அரசுத் தலைவர்களிடம் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

மலையக மக்களின் வாக்குகளை வைத்துக் கொண்டு தொண்டமான் "பிளாக் மெயில்" செய்வதை அனுமதிக்கக் கூடாது என்றும் அவர்கள் குறிப்பிட்டனராம்.

ஆளும் ஐ. தே. கவுக்குள் மீண்டும் காமினி திஸநாயக்காவைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனபதை ஆதரித்து வரும் ஆளும் கட்சிப் பிரமுகர்களே அமைச்சர் தொண்டமானுக்கு எதிரான கருத்தை கட்சிக்குள் பரப்பி வருவதாகவும் கருதப்படுகிறது. (உ)

## அதிசகதி ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருத்த செக்கோஸ்லோவேக்கியா விலிருந்து நிபுணர்களை வரவழைக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

'யாழ்தேவி' நடவடிக்கையின் போது படையினர் பலத்த எதிர்ப்பினைச் சந்தித்ததை அடுத்து, நவீன ஆயுதங்களை கொள்வனவு செய்வதில் அரசு ஆர்வம் காட்டி வருவதாக கொழும்பு பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. (த)

## நன்றி

என்னால் தவறவிடப்பட்ட சிற்றிசன் கைக்கடிகாரத்தை கண்டெடுத்து ஒப்படைத்த கரவெட்டி இமுக்கைச் சேர்ந்த

இ. ஒப்பிலாமணிக்கு

எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா.
கஸ்தூரி செல்வன்

(27781)

## ஓய்வூதிய கோவைகள்

யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களின் 17 ஆயிரம் பேரின் ஓய்வூதியக் கோவைகள் கப்பல் மூலம் யாழ் செயலகத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. (த-100)

வறிய மாணவர்களுக்கு உதவும் நோக்குடன்

## யா/திருக்குடும்பக் கன்னியர் மட இன்ரறக்ட் கழகம்

# இராகமாலிகா இசைக் குழுவினரின்

ஆதரவுடன் வழங்கும்

# ★ இன்னிசை கானம் ★

காலம்: 1993 ஐப்பசி 30

நேரம்: முற்பகல் 9.00மணி, பிற்பகல் 2.00மணி

இடம்: யா/புனித பத்திரிசியார் கல்லூரி

குறிப்பு: மறைக்கல்வி தேர்வுக்கு தோற்றும் முற்பகல் நுழைவுச் சீட்டை பெற்ற மாணவர்கள் பிற்பகல் நிகழ்ச்சிக்கு அனுமதிக்கப்படுவர். பிற்பகல் நுழைவுச் சீட்டை பெற்ற ஏனையோர் வசதியாயின் முற்பகல் நிகழ்விற்கு சமுகமளிக்கலாம்.

யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்
இன்ரறக்ட் கழகம்

(27780)

# எமது நேற்றைய வெளியீடுகள்

ஆக்ஷன் ஹீரோ மோகன்லால், பார்வதி

★ கேப்டன் தேவாரம்

சரத்குமார், அறிமுகம் ப்ரியா, கவுண்டமணி

★ ஐ லவ் இந்தியா

ரகுமான், சுகன்யா

★ கறுப்பு வெள்ளை

தியாகராஜன், கீதா, சிவரஞ்சனி

★ வீரமுழக்கம்

ரகுவரன், ரம்யாகிருஷ்ணன்

★ தூள் பறக்குது

என்றும் தரமான பிரதிகளின் முன்னோடிகள்

## சுப்பர் ஸோ வீடியோ ஓடியோ சென்ரர்

148/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(கி/6276)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் அ. அரவிந்தனின் (உ/த 91 யாழ். இந்து மாணவன்)

தந்தையான

## செல்லையா அப்புத்துரை

(ஓய்வுபெற்ற உப அதிபர், உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்)

அவர்களின் திடீர் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நண்பர்கள்

(27791)

# மரண அறிவித்தல்

## கனகசபை திருநாவுக்கரசு

காரைநகர் களபூமி நத்தாவிளைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் நீராவியடி அரசடி வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான கனகசபை திருநாவுக்கரசு 25 - 10 93 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இராவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற காரைநகரைச் சேர்ந்த ஆறுமுகம் கனகசபை (சட்டத்தரணியும், நொத்தாரிசும்) — பார்வதரத்தினம்மா தம்பதிகளின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற கி சந்தையா (மலாயன் பென்சனியர்) — வள்ளியம்மை தம்பதிகளின் அருமை அருமை மருமகனும், ரவீந்திரன் (பொறியியலாளர் Air Lanka, கொழும்பு), சித்ராதேவி (ஆசிரியை, தியாகராசா ம. ம. வித்தியாலயம், காரைநகர்), மனோரஞ்சினி, கமலேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரியின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரி சோமசுந்தரம், திருமதி மகேஸ்வரி கணபதிப்பிள்ளை, திருமதி தையல்நாயகி பரமலிங்கம், திருமதி கௌரீஸ்வரி பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்—

காலஞ்சென்ற க. சோமசுந்தரம் (சட்டத்தரணி), க. கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், நீர்பாசனத் திணைக்களம்), இ. பரமலிங்கம் (இளைப்பாறிய வைத்திய அதிகாரி), ச. க. பொன்னம்பலம் (சட்டத்தரணியும், பிரபல தொழிலதிபரும், கொழும்பு), திருமதி நாகம்மா இதம்பரப்பிள்ளை, திருமதி பாக்கியம் சண்முகம், காலஞ்சென்ற திருமதி பொன்னம்மா இராமநாதன், சந்தையா பரமநாதன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 77, அரசடி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. கமலேந்திரன்
(மகன்)

77, அரசடி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(27789)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26 10 1993 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org